Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 25, 2023

திங்கட்கிழமை டிசெம்பர் 25, 2023 | ஒளி: 09 கதிர் 156 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ FREE



நீண்ட நாட்களின் பின்னர்

# இலங்கையில் பதிவான கொவிட் மரணம்

கண்டியில் உள்ள தேசிய மருத்துவமனையில் சனிக்கிழமை (23) கொவிட்-19 என சந்தேகிக்கப்படும் மரணம் பதிவாகியுள்ளது.

கம்பளை அட்கல பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நபர் ஆரம்பத்தில் மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் நுரையீரல் தொற்றுடன் அனுமதிக்கப்பட்டதுடன், பிரேதப் பரிசோதனை மற்றும் PCR பரிசோதனையில் அவருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், நோய்த்தடுப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறையின் தலைவர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர, இலங்கையில் இன்ஃப்ளூயன்ஸா போன்ற நோய்கள் அதிகரித்து வருவதால், ஜே.என்.1 - ஒமிக்ரோன் வகை துணை வைரஸ் சமூகத்தில் காணப்படலாம் என்று சமீபத்தில் கூறினார்.

கொவிட்-19 தொற்றுநோய் முடிவுக்கு வந்ததில் இருந்து ஒரு அமைதியான காலகட்டம் நிலவி வந்த நிலையில் இந்தச் சம்பவமானது மக்கள் மத்தியில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இனிய நத்தார் வாழ்த்துகள்

இயேசு பிறப்புக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்த நன்னாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது வாசகர்களுக்கும் தமிழ்மிரர் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் அகம் மகிழ்கின்றோம்.

(வாழ்த்துச் செய்தி P3 )



## மதுபானசாலைகளுக்கு பூட்டு




கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் உத்தரவுக்கமைய, கிறிஸ்மஸ் தினம் மற்றும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, உரிமம் பெற்ற அனைத்து மதுபானக் கடைகளும் டிசெம்பர் 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் மூடப்படும்.

தொடர்ச்சி P2

## சிறைச்சாலை விடுத்துள்ள விசேட அறிவிப்பு

ஞாயிற்றுக்கிழமை (24) மற்றும் நத்தார் பண்டிகைக்கும் (25) சிறை கைதிகளை உறவினர்கள் பார்வையிட சிறைச்சாலை சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை விதிமுறைகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும்

தொடர்ச்சி P2

அஸ்வெசும தொடர்பில்

## ஜனாதிபதி பிறப்பித்துள்ள உத்தரவு



நாட்டில் அஸ்வெசும பயன்பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, அடுத்த ஆண்டு முதல் இந்த எண்ணிக்கை 400,000 குடும்பங்களால் அதிகரிக்கப்பட்டு, 2.4 மில்லியன் குடும்பங்கள் நன்மை பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

எரிபொருள் விநியோகத்தை

## தொடர்ச்சியாக முன்னெடுக்கவும்



பண்டிகைக் காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதவாறு அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் உறுதி செய்ய வேண்டுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பு

நாட்டில் சுகாதார சேவையின் மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார செயலாளர், வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இலவச சுகாதார சேவையை முன்னேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுக்களின் கூட்டத்தில்

தொடர்ச்சி P2




## அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிப்பு



நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 3.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறியுள்ளார். மேலும், கடந்த வருட இறுதிக்குள் டொலரொன்றின் பெறுமதி 365 ரூபாவாக இருந்தது. தற்போது டொலரொன்றின் பெறுமதியை 320 ரூபாவிற்கு

தொடர்ச்சி P2



## “முகக்கவசம் அணியுங்கள்”

மக்கள் மீண்டும் முகக்கவசம் அணியவேண்டும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

ஜே.என். 1 ஒமிக்ரோன் உப பிறழ்வான புதிய கொவிட் வைரஸ் திரிபு இலங்கையிலும் பரவி வருகின்றமையே இதற்கு காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இதன் விளைவாக இலங்கையில் சளி போன்ற நிலைமை ஏற்படலாம் எனவும், எவ்வாறாயினும் இது தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாமெனவும் தெரிவித்துள்ளார்.



## வழிபாட்டு தளங்களுக்கு விசேட பாதுகாப்பு

தேவாலயங்கள் மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கு இன்று முதல் இரண்டு நாட்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஞாயிற்றுக்கிழமை (24) மற்றும் திங்கட்கிழமை (25) விடேச பாதுகாப்பு வழங்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மதகுருமார்கள் 0112 47 2757 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பொலிஸ் தலைமையகத்தைத் தொடர்புகொண்டு பாதுகாப்பு உதவிகளைப் பெற முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் 7500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


## 8 கைதிகள் வைத்தியசாலையில் அனுமதி

மாத்தறை சிறைச்சாலையில் காய்ச்சலின் அறிகுறிகளுடன் மேலும் 8 கைதிகள் சனிக்கிழமை (23) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் (புனர்வாழ்வு) காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 16 நோயாளர்கள் தற்போது மாத்தறை பொது வைத்தியசாலையில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களில் இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




## ‘யுக்திய’ வில் 13,666 பேர் கைது



போதைப்பொருள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையான ‘யுக்திய’ சுற்றிவளைப்பு திட்டத்தின் போது, 13,666 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தொடர்ச்சியாக முன்னெடுக்கவும்

சிபெட்கோ, லங்கா ஐஓசி, சினோபெக் ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் குறைந்தபட்சம் 50% எரிபொருள் இருப்பை பேணுவதற்குச் செயற்பட வேண்டும் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிறைச்சாலை விடுத்துள்ள விசேட அறிவிப்பு

இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கைதிக்கு தேவையான உணவை மாத்திரமே உறவினர்கள் கொண்டுவர முடியும் என்பதுடன் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி பிறப்பித்துள்ள உத்தரவு

அஸ்வெசும திட்டத்துக்குள் உள்வாங்கப்படுகின்றவர்களுக்குச் சிறுநீரகத் தொகுதி போன்ற நிவாரணங்களும் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக வரவு-செலவு திட்டத்தின் ஊடாக 207 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பு

கலந்துகொண்டிருந்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், “தரமான சேவையை பெற்றுக் கொடுக்க ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுவதுடன், சுகாதாரக் கல்வி, போஷாக்கு, உளநலம், தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தொற்றாநோய்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், உலகில் வளர்ந்த நாடுகளில் காணப்படும் சுகாதார சேவைக்கு நிகரான சுகாதார சேவையை உருவாக்கும் நோக்கில் இந்த நிபுணர் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், எதிர்காலத்தில் இலங்கை மக்களுக்கு தரமான, வழக்கமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும்“ அவர் தெரிவித்துள்ளார்.

# மதுபானசாலைகளுக்கு பூட்டு

எவ்வாறாயினும், சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு, அவர்களின் வசதிக்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நட்சத்திர தர ஹோட்டல்களில் செல்லுபடியாகும் மதுபான அனுமதிப்பத்திரங்கள் மூலம் மதுபான சாலைகளை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கலால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், செல்லுபடியாகும் மதுபான உரிமங்களைக் கொண்ட SLTDA-அங்கீகரித்த நிறுவனங்கள் உட்பட அனைத்து மதுபானக் கடைகளும் போயா தினத்தன்று (26 ) மூடப்பட்டிருக்கும்.

# அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிப்பு

கொண்டுவர முடிந்துள்ளது எனவும், அதற்கமைய டொலரின் பெறுமதியை 11 வீதத்தால் குறைக்க முடிந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

# ‘யுக்திய’ வில் 13,666 பேர் கைது

பொலிஸ், STF மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினரால் டிசெம்பர் 17ஆம் திகதி அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் ஆரம்பிக்கப்பட்ட விசேட நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை (24) நள்ளிரவு 12.30 மணியளவில் நிறைவடைந்தது.

13,666 பேரில் 717 சந்தேக நபர்கள் தடுப்புக்காவல் உத்தரவுகளுடன் மேலதிக விசாரணையில் உள்ளனர் என்று பொது பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (24) 12:30 மணி நிலவரப்படி, 9.82 கிலோ கிராம் கிராம் ஹெரோயின், 4.679 கிலோ கிராம் ஐஸ், 272 கிலோ கிராம் கஞ்சா, 944,651 கஞ்சா செடிகள், 117 கிலோ கிராம் மாவா, 35 கிலோ கிராம் சாம்பல், 989 கிராம் ஹஸிஸ், 3 கிலோ கிராம் துலே, 520 கிராம் குஷ் மற்றும் 65,924 போதை மாத்திரைகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், 174 சந்தேக நபர்கள் சட்டவிரோத சொத்து வைத்திருப்பிற்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் போதைக்கு அடிமையான 1,097 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும், பாதாள உலகக் குற்றவாளிகளால் சட்டவிரோதமான முறையில் பெறப்பட்ட ஏராளமான வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# 1,004 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நத்தார் பண்டிகையை முன்னிட்டு அதிகளவான கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் (புனர்வாழ்வு) காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.



அந்த கைதிகளுக்கு நிபந்தனைகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், திங்கட்கிழமை (25) நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் இருந்து பொது மன்னிப்பில் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சிறையில் இருந்த, ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்தின் ஒரு பகுதிக்கு ஒரு மாதம் மன்னிப்பு, அபராதம் செலுத்தாததற்காகச் சிறையில் இருக்கும் கைதிகளின் தண்டனையின் எஞ்சிய காலத்தை ரத்து செய்தல், 65 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த கைதிகளுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையில் பாதி அல்லது அதற்கு மேல் உள்ளவர்களுக்கு பொது மன்னிப்புக்குத் தகுதியுடையவர்கள் மற்றும் 40 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மற்றும் இன்றுக்குள் அந்த தண்டனையின் 20 ஆண்டுகள் அனுபவித்த கைதிகளும் மீதமுள்ள தண்டனையை ரத்து செய்வதன் மூலம் பொது மன்னிப்புக்குத் தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மாடிக்குடியிருப்புகளின்

# வீட்டுரிமம் விரைவில்



அரச மாடிக்குடியிருப்பு வீடுகளின் உரிமத்தை மக்களுக்கு வழங்கும் கொள்கை ரீதியான தீர்மானத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் தலைவருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அது தொடர்பிலான பிரச்சினைகளை நிவர்த்திக்கும் நோக்கில் விரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

காணி உரிமம் வாயிலாக மக்களுக்கு அரச மாடிக்குடியிருப்பு வீட்டு உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் வெள்ளிக்கிழமை (22) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய 2024ஆம் ஆண்டுக்குள் 2351 வீடுகளுக்கான உரிமைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

காணி உரிமை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள், அதற்கான விடுவிப்பு பத்திரங்கள், சான்றிதழ்கள் தொடர்பிலான பிரச்சினைகள், பிணையாளர் மற்றும் பரிந்துரைகள் ஆகிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# தம்மிக்கவுக்கு ஆதரவு கோரி விளம்பரம்



வர்த்தகர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைக்கும் முயற்சியில் பொதுமக்கள் இணைந்து கொள்ளுமாறு ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை ஒன்றில் விளம்பரமொன்று வெளியாகியுள்ளது.

தம்மிக்க பெரேராவுக்குச் சொந்தமான Ballys International Holdings நிறுவனத்தினால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஜனாதிபதி வேட்பாளராக தாங்கள் பரிசீலித்து வரும் நான்கு வேட்பாளர்களில் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவும் அடங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து

# STF ஐ நீக்க திட்டம்

நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் பணிகள் மற்றும் அது குறித்த பிரச்சினைகள் தொடர்பிலும், அவர்களை அந்தப் பணிகளில் இருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ள து.



தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடந்த (22) கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்பட்டது.

இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கும், அதன்போது செயல்படவும் குற்றங்களைத் தடுப்பதற்கும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அந்த பணிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரை நீக்கி, அந்த பணிகளை முன்னெடுப்ப தற்கான மாற்றுவழி தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதற்காக முன்வைக்கப்பட்ட பல்வேறு யோசனைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இந்த பணிகளைப் பொறுப்புடன், உரிய வகையில் முன்னெடுப்பதற்கும், இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யக்கூடியதுமான சரியான வேலைத்திட்டம் ஒன்றை பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விரைவில் உருவாக்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# “அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்”



“இயேசு போதித்த அன்பு, எளிமை, கருணை போன்ற உயரிய குணங்களை மக்கள் அனைவரும் பின்பற்றி, சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும். எமது நாட்டில் நிலையான நல்லிணக்கம் - சமத்துவம் மலர அனைவரும் ஒன்றுபட வேண்டும்” என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “ஏழைகளையும், எளிய மனத்தோரையும், கைவிடப்பட்டோரையும் “இறைவனின் பிள்ளைகள் நீங்கள்” என்று வாஞ்சையோடு அரவணைத்து மானிட இனம் நல்வழியில் வாழ, புதிய ஏற்பாடுகளைப் போதித்த இயேசு பெருமான், தன் போதனைகளாலும், வாழ்ந்து காட்டிய நெறிகளாலும், நம் அனைவரின் வணக்கத்திற்குரியவராக திகழ்கிறார்.

எனது பார்வையில் இயேசு ஒரு சமூக புரட்சியாளர். மக்கள் மத்தியில் விடுதலையை விதைத்தவர். இயேசு கிறிஸ்து தன் பிறப்பின் ஊடாக கொண்டுவந்த விடுதலையை, மீட்பை அனைவரும் உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அதுவே உண்மையான மகிழ்ச்சி. ஆகவே இந்த கிறிஸ்மஸ் விழாவானது துன்பங்கள், துயரங்கள், வறுமை, இயற்கையின் இடர்கள், நோய்கள் அனைத்திலிருந்தும் அனைவருக்கும் விடுதலை தருவதாக அமையப் பாலகன் இயேசுவிடம் பிரார்த்திக்கின்றோம். இயேசுவின் கட்டளைகளையும், போதனைகளையும் ஏற்றுக்கொண்டு அமைதியான வழியில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வில் எல்லோருடைய அன்பையும், ஆதரவையும் பெற்று வாழ வேண்டும்.

எமது நாட்டில் அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் நிலை உருவாக வேண்டும். அதற்காக ஒன்றுபடுவோம். நாட்டின் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் இருந்து முழுமையாக மீளவும் நாம் ஒன்றுபடுவோம்” என தெரிவித்துள்ளார்.

# யாழ். போதனா தொடர்பில் விசேட கலந்தாய்வு

யாழ். போதனா வைத்தியசாலையின் சேவைகள் மற்றும் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனுடன் முன்னெடுக்கும் வகையிலான கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக வைத்தியசாலையில் நிலவும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்திய தாதிகள் உட்பட்ட ஆளணிப் பற்றாக்குறை மற்றும் அதனை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் கட்டிட வசதிகளை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற நிலையில், தற்போது கட்டப்பட்டு வருகின்ற 6 மாடிக் கட்டிடத் தொகுதியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் 400 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாகவும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.



மேலும், தட்டுப்பாடாக உள்ள மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்தல், ஆய்வுகூட வசதிகள் விஸ்தரித்தல், தொற்று நோயாளர்களைப் பராமரிப்பதற்கான ஒரு பிரிவு உருவாக்குதல் உட்பட பல்வேறு நிவர்த்திக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதுடன் வெளி நோயாளர் பிரிவின் சேவை நேரத்தினை அதிகரிப்பது உட்பட மக்களுக்கான சேவை விஸ்தரிப்பது, வைத்தியசாலை வளாகத்தினை சுற்றி அமைந்துள்ள கழிவுநீர் வடிகான்களை சுகாதார முறைப்படி பேணுதல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையில் கருத்துரைத்த அமைச்சர், விரைவில் ஜனாதிபதி வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொள்ள இருப்பதால், முக்கியமான விடயங்களை அடையாளப்படுத்தி அறிக்கை ஒன்றைத் தயாரித்தால் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சாதகமான முடிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதியின் கிறிஸ்மஸ் வாழ்த்து

கிறிஸ்மஸ் என்பது எதிர்பார்ப்புக்களின் திருநாளாகும். "கண்ணீருடன் இருளில் சென்ற மக்களுக்கு ஒளி கிட்டியது" அந்த எதிர்பார்ப்புக்களைப் புதுப்பிப்பதற்கான கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவிக்கும் திருநாளாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமையப் பிரார்த்திப்போம்.

"வறியவர்களுடன் ஒரு வேளை உண்ணுங்கள்" என்ற விடயத்தை முன் நிறுத்தி, மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவைக் கொண்டாடும் நாம், ஒருபோதும் யதார்த்தத்தை மறக்கக் கூடாது.

மானிடர்களைப் பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காகச் சிலுவையில் உயிர்த் தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். தம்மை எதிர்ப்பவர்களையும், தமக்கு இடையூறு செய்வோரையும் மன்னித்து அவர்கள் மீதான கோபத்தையும், வெறுப்பையும் போக்கிக்கொள்ளுமாறு கிறிஸ்தவ மதம் நமக்குக் கற்பிக்கிறது.

கிறிஸ்மஸ் கொண்டாத்தினால் சிறந்த

**இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். தம்மை எதிர்ப்பவர்களையும், தமக்கு இடையூறு செய்வோரையும் மன்னித்து அவர்கள் மீதான கோபத்தையும், வெறுப்பையும் போக்கிக்கொள்ளுமாறு கிறிஸ்தவ மதம் நமக்குக் கற்பிக்கிறது**

மாற்றங்கள் கிடைக்கும். அவ்வாறான மாற்றங்கள் உளப்பூர்வமானதும் உண்மையானதுமாக இல்லாத போது கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அர்த்தமற்றாகிவிடும்.

பல்வேறு சவால்கள் நம்முன் நிற்கின்ற தருணத்தில், நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றோம். நாட்டின் நமக்கிருக்கும் சவால்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டுமென அழைப்பு விடுக்கும் அதேநேரம், உலக மக்கள் அனைவருக்கும் அன்பும், அமைதியும் நிறைந்த பண்டிகையாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

## கலாநிதி பட்டம் பெற்றார் சீ.வை.பி.ராம்



மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்பு பிரதான அமைப்பாளருமான சீ.வை.பி.ராம் ஐக்கிய இராச்சியத்தின் லின்கன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவ (எம்.பி.ஏ) துறையில் 3 வருடகால கல்வியை முடித்துக்கொண்டு கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

அவருக்கான பட்டமளிப்பு விழா கடந்த வாரம் கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சிரேஷ் முகாமைத்துவ ஆலோசகரான இவர், BOI இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி நிறுவனங்களுக்குப் பொருளாதாரம் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கி வருபவராவார்.

செயற்பாட்டு அரசியலில் இருந்து வரும் இவர், தனது அரசியல் பயணத்துடன் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணச் சிறந்த பல ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## யானை குருக்கே வந்த்தால் பஸ் விபத்து

அனுராதபுரம் இப்பலோகம மஹாலுப்பள்ளம் பகுதியில் யானை மீது பஸ் ஒன்று மோதியதில் விபத்துக்குள்ளான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (24) பதிவாகியுள்ளது.

கெக்கிராவயிலிருந்து அனுராதபுரம் நோக்கி தலாவ வீதியில் பயணித்த தனியார் பேருந்து ஒன்று மயிலுப்பள்ளம் பகுதியில் வைத்து திடீரென வீதியைக் கடக்க முயன்ற காட்டு யானையுடன் மோதி , வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் , விபத்தின் போது பஸ்ஸில் சுமார் 25 பயணிகள் பயணித்துள்ளதாகவும் பஸ்ஸின் சாரதி, நடத்துனர் மற்றும் 06 பயணிகள் காயங்களுக்குள்ளாகி அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரியவந்துள்ளது.



மேலும் இச்சம்பவம் தொடர்பில் இப்பலோகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கரும்பு காணியிலிருந்து சடலம் மீட்பு

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பகுதியில் காணி ஒன்றில் இருந்து கொலை செய்யப்பட்ட நிலையில், சடலமொன்று சனிக்கிழமை (23) மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய முஹம்மது சித்தீக் ஹாஜியார் என்பவரே இவ்வாறு வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் வேலை ஒன்றினை முடித்த பின்னர் அதற்கான கூலி கொடுப்பதில் ஏற்பட்ட தகராறே இக்கொலைக்கு



காரணம் எனவும் இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதுடன், அருகில் இருந்த வீடு ஒன்றில் மறைத்து வைத்து சனிக்கிழமை அதிகாலை அருகிலுள்ள கரும்பு காணிக்குள் வீசப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முனடனெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## பல்கலைக்கழக மாணவி உயிரிழப்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் திடீர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (23) பதிவாகியுள்ளது.

கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் குணரத்தினம் சுபீனா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில்,



சனிக்கிழமை (23) உயிரிழந்துள்ளார்.

மேலும் குறித்த பெண்ணின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்குப் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

## எதிர்க்கட்சி தலைவரின் வாழ்த்து

"அமைதியன் அரசர்"என்ற கௌரவப் பெயர் பெற்ற இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பின் சிறப்புத் தினத்தை நினைவு கூறும் நத்தார் தினம் இன்றாகும்.

தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பியதன் மூலம்,தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகள் பூமியில் மீண்டும் வாழ வேண்டும் என்ற ஆண்டவர் எதிர்பார்த்தார். இருண்ட இதயங்களுக்கு கிறிஸ்து நித்திய ஒளியைக் கொண்டு வந்தார். பகிர்வு என்ற அற்புதமான பாடத்தை உலகுக்குக் கற்றுத் தந்த அற்புதமான நத்தார் பண்டிகையை, கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, இன, மத வேறுபாடின்றி உலக மக்கள் பலரும் கொண்டாடி வருகின்றனர். அன்பும், ஆதரவும், அமைதியும்,

சமாதானமும், சமத்துவமும் நிறைந்த உலகைப் படைக்க இயசு தனது அன்பின் கரங்களை நீட்டி, துயரங்கள் நிறைந்த இதயங்களை அமைதிப்படுத்தினார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உலகளாவிய கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதத்தில் நத்தார் தினத்தைத் தேவாலய மணிகள் அடித்தும்,இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் மெழுகுவர்த்தி வழிபாடுகளுடனும் கொண்டாடுகிறார்கள். இயசு கிறிஸ்து கொண்டி வந்த அன்பு, சகோதரத்துவம், ஏழைகளுக்கு உதவுதல் என்ற செய்தியில் வாழ்ந்தால் மட்டுமே நத்தார் மகிழ்ச்சி தரும்.

சிறிய குடிசைகள் முதல் பெரிய வீடுகள் வரை மக்கள் தங்களால் இயன்ற விதத்தில் நத்தார் பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர். "நல்லவன் தன் இதயத்தில் பொக்கிஷமாக வைத்த நன்மையை விதைப்பான், தீயவன் தன் இருதயத்தில் பொக்கிஷமாக வைத்த தீமையை விதைப்பான்" என்று பைபிள் சொல்கிறது. நன்மையும் மனித நேயமும் நிறைந்த ஒரு நாட்டுக்காக உலகிற்காக நம்மை



**பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்காததாலும், குற்றவாளிகள் அடையாளம் காணப்படாததாலும், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்**

அர்ப்பணிக்க இயேசு வழி காட்டியுள்ளார் என்பதை இது தெளிவாக்குகிறது.

பல வருடங்களாக இலங்கை கிறிஸ்தவ மக்கள் ஈஸ்டர் மற்றும் நத்தார் பண்டிகைகளை ஒன்றாக அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்காததாலும், குற்றவாளிகள் அடையாளம் காணப்படாததாலும்,

பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். ஈஸ்டர் தாக்குதலில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

நத்தார் செய்தி பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் அமைதி உண்டாவதாக என்பதாகும். விடுதலைச் செய்தியை உலகிற்கு எடுத்துரைத்து, நத்தாரின் உண்மையான அர்த்தத்தை எடுத்துக் காட்டும் மகிழ்ச்சியும்,அமைதியும் நிறைந்த நத்தார் பெருவிழாவாக அமைய நல்வாழ்த்துக்கள்.





## சூடு பிடித்துள்ள பண்டிகைக்கால வியாபாரம்

றொஸரியன் லெம்பேட்

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு மன்னார் நகர சபை பிரிவுக்குப்பட்ட பகுதிகளில் தற்காலிக பண்டிகை கால வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளது.

மன்னார் நகர சபையினால் கேள்வி கோரல் அடிப்படையில் சுமார் 300க்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளூர் மற்றும் தென் பகுதி வியாபாரிகள் இடத்தைக் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை குறித்த பண்டிகை கால வியாபார நடவடிக்கைகள் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாடுகளை திருடிய மூவர் சிக்கினர்

க. அகரன்

வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக மாடுகள் திருடப்படும் சம்பவங்களில் ஈட்டுப்பட்டிருந்த 03 சந்தேக நபர்களைக் கைது செய்து வாகனமொன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவில் மாடுகளைத் திருடி வாகனத்தில்



ஏற்றிக் கடத்தும் குழு தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# மனித இனத்துக்கே கிடைத்த மாபெரும் அதிசயமான நன்நாள்

ஒவ்வொரு இடத்திலும் தொற்றிக்கொள்ளும் ஏதோவொரு தீய பழக்கம், வழக்கமாகிவிடும். அதிலிருந்து பலரும் விடுபட்டுக்கொள்வர். இன்னும் சிலர் மீண்டெழ முடியாமல் மூழ்கிவிடுவர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானவர்கள், இன்றிலிருந்து விட்டுவிடுவேன் என சபதம் எடுத்துக்கொள்வர். இன்றைய நாளிலும்கூட சபதமெடுப்பர்.

பிறந்த நாள், வருடப்பிறப்பு, இயேசு கிறிஸ்து பிறந்திருக்கும் நன்நாளில் கூட சபதமெடுப்பதைப் பலரும் விரும்புவர். ஒவ்வொரு குடும்பங்களிலும் பிறக்கும் குழந்தைகள் அந்தந்த குடும்பங்களுக்குக் கிடைக்கும் ஓர் அதிசயம். ஆனால், பாலகன் இயேசுவின் பிறப்பு மனித இனத்துக்கே கிடைத்த மாபெரும் அதிசயமாகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை.

இரண்டொரு வருடங்களாக இன்றைய நன்நாளை, குடும்பத்தாருடன் வெளியில் சென்று மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடி மகிழமுடியாத சூழல் நிலவியிருந்தது. அதன் தாக்கம் இன்னும் நம்மையெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தாலும், மிகக் கவனமாக, வெளியில் சென்று திரும்புவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிலவற்றை எளிதில் மறந்துவிடலாம். மனிதர்களிலும் பலர் மறக்கப்பட்டுவிடுவார்கள், சம்பவங்களும் மறக்கப்பட்டுவிடும். ஆனால், கொரோனா வைரஸ் வரலாற்றிலேயே மறக்க முடியாத அளவுக்கு மக்களின் மனங்களில் பதிந்துள்ளது. மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

பரிசுப்பொருட்களைக் கொடுத்து, விருந்துபசாரம் உண்டு மகிழ்ந்த காலம் மலையேறியிருந்தது. அவையெல்லாம் கொஞ்சம், கொஞ்சமாக வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில், எங்குச் சென்றாலும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவதன் ஊடாக, அடுத்தடுத்த பிறழ்வுகளில் இருந்து தம்மையும் மற்றவர்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

வரலாற்றில் வலம் வந்த எத்தனையோ பேர் இம்மண்ணிலிருந்து மறைந்து விட்டார்கள். ஏன்? மனித மனங்களிலிருந்தும் மறைந்து விட்டார்கள். ஆனால் உலகிற்கு ஒளியாக, வாழ்வுக்கு வழியாக, உண்மைக்குச் சான்றாக, கன்னி மரியின் மகனாக இம்மண்ணில் பிறந்த இயேசு, இன்றும் இம்மண்ணில், மனித மனங்களில் வாழ்ந்து வருகிறார்.


இந்த நன்நாளிலில் தான் அமைதியும் சமாதானம் விதைக்கப்பட்டது. ஆனால், உலகில் பல இடங்களில் இவ்விரண்டையும் தேடிக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு விலைகொடுத்தாலும் இவ்விரண்டையும் வாங்க முடியாது. ஆனால், மனித உள்ளங்களில் தோன்றி, ஆழமாய் அடிக்கப்பட்டிருக்கும் தீய எண்ணங்கள் எனும் ஆணியை பிடுங்கியெடுத்து எறிவதன் ஊடாக, அமைதி, சமாதானத்தை இலகுவில் வென்றெடுத்து விடலாம்.

எல்லாமே, மனிதர்களின் மனங்களில்தான் இருக்கிறது.

மனித உள்ளங்களில் தோன்றிய தீய எண்ணங்கள் ஒழிக்கப் பட்டு அமைதியும், சமாதானமும் விதைக்கப்பட்ட இந்நாளில் நாமெல்லாம் உறுதிப்பூண்டுக் கொள்வோமாயின் உலக சமாதானம் வெகு தொலைவில் இல்லை. அவையெல்லாம் எமது எண்ணங்களிலேயே இருக்கிறது என்பதை நினைவூட்டுகின்றோம்.

உலக நாடுகள் பலவற்றுக்கு இடையில், ஏற்பட்டிருக்கும் மோதல்கள், யுத்தம் இவையெல்லாம் அடியோடு ஒழிக்கப்பட்டு, உலகின் சமாதானம் மலரவேண்டுமெனப் பாலகன் அவதரித்த இந்நாளிலாவது உறுதிப்பூண்டு பிரார்த்தனை செய்வோமாக.






## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மை மிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழிச் செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை; அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# தீர்வு கோரி முற்றுகைக்குத் தயாராதல்

**லக்ஸ்மன்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டோரின் விடுதலை, மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல் தரைப் பிரச்சினை, 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுலாக்கல், உள்ளூராட்சி மன்றங்களில் அமைய தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கல், வடக்கு கிழக்கில் அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன. இவை ஒன்றும் புதிய விடயங்களல்ல. நீண்டகாலமாக தமிழ் மக்களால் கோரப்பட்டு வரும் விடயங்களே. இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தாலும் இவற்றுக்குப் பேச்சளவில் மாத்திரமே இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று பல தடவைகளில் இணக்கப்பாடுகள், உறுதிப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தாலும் தீர்க்கப்படாதவைகளாகவே அவை இருந்து வருகின்றன. இதற்கு என்ன காரணம் என்று நம் எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அவற்றினை வெளிப்படையாக பொதுவெளியில் தமிழர் தரப்பு போட்டுடைத்திருந்தாலும் இதுவரையில் அவை தொடர்பில், இலங்கை அரசாங்கத்தின் மேல்மட்டத்தினர் காலங்கடத்தும் நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர்.

யுத்தம் மௌனிப்புக்குக் கொண்டு வரப்பட்டு 15 வருடங்களாகின்ற நிலையில், உண்மைக்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்ட வரைபொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த வரைபை ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக சட்டமாக்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் பரணகம ஆணைக்குழு உட்பட பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் இது சற்று வித்தியாசமாக சட்ட வரைபொன்றின் ஊடாக உருவாக்கப்படுவது நல்ல முயற்சியாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளலாம். இருந்தாலும் அதன் வலுவும் செயற்பாடும் தீர்வை முன்வைப்பதும் எவ்வாறிருக்கும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியாவுடன் 1987ஆம் ஆண்டில் செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. 13ஆவது திருத்தம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக இல்லாது விட்டாலும் ஒரு இடைக்காலத் தீர்வாக அமைந்திருப்பதாகத் தமிழர்கள் நம்பியிருந்தனர். அதையாவது முற்று முழுதாக நிறைவேற்றினால் தற்போது பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாட்டை மிக விரைவில் மீட்டெடுக்க முடியும் என்று தமிழர் தரப்பு தெரிவித்து வருகின்றது.

ஆனால், அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் நாட்டில் முழுமையாக நடைமுறையிலுள்ளன. அதற்கான காரணம் என்ன என்பது வெளிப்படையானதே. அந்தவகையில், உண்மைக்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு எவ்வாறு அமையும் என்பது தெரியாததொன்றே. ஆனாலும், பெரும்பான்மையினரது நலன் சார்ந்தவைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதும், தமிழ் மக்களது உரிமை சார்ந்த விடயங்கள் கூட கணக்கிலெடுக்கப்படாது என்பதும்தான் உண்மை.

பயங்கரவாதத் தடைச்சட்டம், ஐ.சீ.சி.பீ.ஆர், சுகாதாரச் சட்டம் என நீதி மன்றங்களில் வலிந்து கோரிக்கை பெற்று பொலிஸார் தமிழ் மக்கள் மாவீரர் தினம் போன்ற அஞ்சலி, நினைவு நிகழ்வுகளைக்கூட நடத்த முடியாதளவுக்குத் தடைகளும், கைதுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும், நீதிமன்றத்தின் கட்டளைகள், தீர்ப்புகளை அமுல்படுத்துவதில் அவர்களுக்கு முடியாமலிருக்கிறது. முடியாமலிருக்கிறதா, அதற்கு மனமில்லையா அல்லது இயலாமையா என்பது பல கேள்விகளுக்கானதாகும். இதற்கு கடந்த மாதத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட மயிலத்தமடு-மாதவணை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை அத்துமீறல் தொடர்பான விடயத்தினைக் குறிப்பிட முடியும்.

யுத்தம் ஓய்ந்த கையோடு ஆரம்பித்த மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைப்பிரச்சினை இதுவரை முடிவுக்கு வரவில்லை. மாவட்ட, மாகாணம், மற்றும் பாராளுமன்றம் என கொண்டு செல்லப்பட்டும் தீர்வு எட்டப்படாத ஜனாதிபதியினால் தீர்வுக்குட்படுத்தப்பட்டு பலன் கிடைக்காத ஒன்றாக இருக்கின்ற மேய்ச்சல் தரைக்காக தீர்வு கோரும் பண்ணையாளர்களது போராட்டம் இன்றுடன் 102 நாட்களை எட்டியிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பிரதேச செயலகத்தின் கீழுள்ள மயிலத்தமடு, பெரியமாதவணை பிரதேசத்தில் உள்ள மேய்ச்சல் தரையில் பல்லாண்டு காலமாகப் பரம்பரை பரம்பரையாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களின் செயற்பாடுகளை முடக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தையும் மாவட்டத்தின் பொருளாதாரத்தையும் சிதைத்து, பொருளாதார ரீதியில் அழிவினை மேற்கொள்ளும் நில ஆக்கிரமிப்பாளர்களின் இனவாத செயற்பாடானது தொடர்ந்து வருகிறது.

கால்நடை வளர்ப்பு என்பது தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்துடன் மட்டுமன்றி தமிழர்களின் வழிபாடு, கலை, கலாசாரம், பண்பாட்டுடனும் தொடர்புபட்டுள்ளது. அந்தவகையில், பொருளாதாரத்தினையும் வழிபாடு, கலை, கலாசாரம், பண்பாட்டினை பாதுகாப்பது அடிப்படை உரிமையாக அமைகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் அத்துமீறி ஊடுருவும் அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த நில ஆக்கிரமிப்பாளர்கள் மிகவும் துணிகரமாகக் காடுகளையும் மேய்ச்சல் தரையினையும் தினந்தோறும் அழித்து நில ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றனர். இதற்கெதிராக சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொலிஸ், வனவளத்துறை மற்றும் அரச அதிகாரிகள் வேடிக்கை பார்க்கின்ற நிலையே காணப்படுவதாகப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை எவ்வகையான செயற்பாடாகக் கொள்வது என்பதும் அவர்களது வினாவாகும்.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களின் சட்டரீதியானதும் நீதியானதுமான கோரிக்கைகளுடனான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாதங்கள் எட்டப்பட்ட நிலையில், ஜனாதிபதி பண்ணையாளர்களைச் சந்தித்துத் தீர்வொன்றினை முன்வைத்தார். ஆனால், அது நிரந்தரமான தீர்வாக அமையாது என்று தெரிவித்த பண்ணையாளர்கள் தங்களுடைய போராட்டத்தினைத் தொடர்ந்தனர். அதன் பின்னர் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் மகாவலி அதிகார சபையினால் வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றத்தின் மூலமாக அத்துமீறிய நில ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறவேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டது. ஆனால், மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் ஆக்கிரமிப்பாளர்களின் அடாவடிகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

பண்ணையாளர்கள் முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை பாரம்பரிய மேய்ச்சல் தரை நிலத்தினுள் பிரவேசிப்பது தடுக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவது அவற்றை கொலை செய்வது, காயப்படுத்துவது, கால்நடைகளை வாள் போன்ற கூரிய ஆயுதங்கள் கொண்டு வெட்டிக்கொலை செய்வது காயம் ஏற்படுத்துவது, மின்சாரம் பாய்ச்சி கால்நடைகளைக் கொல்வது, வாய் வெடி வைத்தும், யானை வெடிகளை பண்ணையில் வெடிக்கச்செய்தும் கால்நடைகளை அழிப்பது, கால்நடைகளை கட்டி வைத்து வழக்குத் தொடர்வது, கப்பம் கோருதல் என விரும்பத் தகாத செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பண்ணையாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றபபட்டாமல் காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றமையானது மிகவும் கவலைக்குரியதொன்று என கருத்துக்கள் வெளியிடப்பட்டாலும், பதில்கள் எதிர்மறையாகவே இருந்து வருகின்றன.

இந்தவகையில், பண்ணையாளர்களுடைய போராட்டத்திற்கு கைகோர்க்கும் ஆதரவுகளும் அதிகரித்து வருகின்றன. அதில் ஓர் அங்கமாக பண்ணையாளர்களுடைய போராட்டத்தின் 100ஆவது நாளான சனிக்கிழமை நடைபெற்ற போராட்டத்திற்கு அரசியல் தரப்பினர், சிவில் அமைப்புகள் என அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர்.

இந்த வகையில்தான் இவ்வாறான போராட்டங்கள் தீர்வைத்தரா என்ற எண்ணப்பாடு தோற்றம் பெறுகிறது. அதன் ஒழுங்கில்தான் பெரும் முற்றுகைப் போராட்டத்துக்கான முடிவினை அமைதி நிலைப்பாட்டினை உடைத்தெறிந்து எடுக்கு| வேண்டும் என்ற கோரிக்கையும் உருவாகிறது.

போராட்டத்திற்கு வலுசேர்க்கின்றோம் என்று அறிவிப்பது மாத்திமன்றி, வட கிழக்கில் வாழும் தமிழ் பேசும் சமூகங்கள் மயிலதாதமடு- பெரியமாதவணை பண்ணையாளர்களின் நீதியான அறவழிப் போராட்டத்திற்கு ஆதரவும் பங்களிப்பும் வழங்க வேண்டும் என்பதாக அது அமைந்திருக்கிறது. இது நடைபெறுவதற்கு மக்களை ஒழுங்குபடுத்துவதே காலத்தின் தேவை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படாமை, பாரபட்சமான முறையில் தமிழ் மக்கள் அணுகப்படுவது, தீர்வுகள் தாமதப்படுத்தப்பட்டு, காலங்கடத்தப்பட்டு பயனற்றுப் போகச் செய்தல், பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துதல், மன உளைச்சலுக்குள்ளாக்கப்படுதல் என்று அடுக்கிப் கொண்டே செல்லக்கூடிய பட்டியலுக்கு தீர்வைத் தேடுவதாக அந்த முற்றுகை அமையவேண்டும். அது எங்கென்பதும் எவ்வாறு என்று தீர்மானிக்க வேண்டியதுமே தேவையெனலாம்.

## கடிதங்கள்

### அணைக்கட்டு சேதம்: மக்கள் அசௌகரியம்

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் குளத்தின் அணைக்கட்டு சேதமடைந்து காணப்படுவதுடன், காட்டு யானைகளாலும் குறித்த அணைக்கட்டின் சில இடங்கள் சேதப் படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்து கடந்த 10 நாட்களுக்கு மேலாக வான் பாய்ந்து வருகின்றது.

இந்த நிலையில், குளத்தினுடைய அணைக்கட்டு நீண்ட காலம் புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுவதுடன், காட்டு யானைகளாலும் அணைக்கட்டின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.

மேலும், குறித்த அணைக்கட்டின் பல இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டு குளத்திலிருந்து நீர் வெளியேறி வருகின்றது.

இவ்வாறு காணப்படுவதனால் மேலதிகமாக நீர் வரத்து அதிகரித்து குளம் உடைப்பெடுக்கும் நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன், குறித்த குளத்தின் புனரமைப்பு பணிகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாததால் இவ்வாறு அணைக்கட்டும் சேதமடைந்து காணப்படுகிறது. இக்குளம் உடைப்பெடுக்குமானால், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்களும் நன்னீர் மீன்பிடியை நம்பி வாழும் மீனவ குடும்பங்களும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

1983 காலப்பகுதியில் குறித்த பிரதேசத்திலேயே குடியேறி இருக்கின்ற மக்களின் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் வளத்தினரால் எல்லையிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வாறு தங்களுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குறித்த காணிகளையும் விடுவித்து, குளத்தையும் புனரடைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

யது பாஸ்கரன்



# கண் கலங்க வைக்கும் வெங்காயம்



ச.சேகர்



சமையலில் வெங்காயம் வெட்டும் போது அதனை வெட்டுபவருடன், அருகிலுள்ளவர்கள் கூட கண் கலங்குவது வழமை. ஆனால், கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக, கடையில் வெங்காயத்தின் விலையை கேட்டவுடன் கண் கலங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆம், டிசம்பர் மாதம் முற்பகுதியில் ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் விலை 200 முதல் 250 வரை காணப்பட்ட நிலையில், கடந்த வாரம் முதல் 750 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் வீட்டு சமையலறை முதல் கடையில் சுடப்படும் வடை வரை கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆம் சந்தியிலுள்ள சாப்பாட்டுக் கடையில் முன்னைய வாரம் வரை வரை 40 ரூபாய்க்கு விற்பனையான ஒரு பருப்பு வடை, கடந்த வாரம் முதல் 50 ரூபாய் ஆகிவிட்டது. "என்ன அண்ணே, வடை 10 ரூபாய் கூடிருச்சே... ஆமா தம்பி, வெங்காயம் விலை ஏறிருச்சே..." என்பதாக விலையின் தாக்கம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாம் சமைக்கும் உணவுகளில் வெங்காயம் என்பது இன்றியமையாத ஒரு சேர்பொருளாக அமைந்திருப்பதுடன், பலருக்கு வெங்காயம் சேர்க்காமல் உணவு சமைக்க முடியாது என்ற ஒரு பழக்கமும் நிலவுகிறது. இந்நிலையில் வெங்காயம் வெட்டும் போது மாத்திரம் ஏற்பட்ட கண் கலக்கம், விலையைக் கேட்டவுடனே கலக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

உண்மையில் சடுதியான இந்த விலை ஏற்றத்துக்குக் காரணம், நம் அண்டை நாடான இந்தியா தான். இலங்கைக்கு மாத்திரமன்றி, ஆசிய பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகளுக்கு இந்தியாவிலிருந்தே வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அது மட்டுமல்ல, உலகின் மாபெரும் வெங்காய ஏற்றுமதியாளராகவும் இந்தியா திகழ்கின்ற நிலையில், டிசம்பர் 8ஆம் திகதி முதல் வெங்காய ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியுள்ளது. இந்தியாவுக்குப் போட்டியாகச் சீனா போன்ற நாடுகளும் வெங்காய ஏற்றுமதியை மேற்கொள்வதுடன், பாகிஸ்தான், துருக்கி மற்றும் ஈரான் போன்ற நாடுகளும் வெங்காய ஏற்றுமதியில் சிறிதளவில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், கேள்வி அதிகரித்துள்ளதால், இந்நாடுகளும் தமது விலைகளை சடுதியாக உயர்த்தியுள்ளன.

இந்தியாவில் வெங்காய உற்பத்தி குறைவடைந்துள்ளமையால், டெல்லி உட்பட பிரதான நகரங்களில் வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்திருந்த நிலையில், இந்த தீர்மானத்தை இந்தியா மேற்கொண்டிருந்தது. மூன்று மாத காலப்பகுதியில் இந்தியாவில் வெங்காயத்தின் விலை சுமார் இரண்டு மடங்கு வரை அதிகரித்துள்ளது. இதனால் தனது உள்நாட்டுத் தேவைக்கு முக்கியத்துமளிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை இந்தியா மேற்கொண்டிருந்தது.

இலங்கை மட்டுமன்றி பங்களாதேஷ், மலேசியா, நேபாளம் மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் கூட இந்த ஏற்றுமதி தடை காரணமாகப் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அந்நாடுகளிலும் வெங்காயத்தின் விலை பெருமளவில் உயர்வடைந்துள்ளது.

இந்த ஏற்றுமதி தடை அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து இந்தியச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை முன்னரை விட சுமார் 20 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இந்தியாவின் வெங்காய ஏற்றுமதித் தடை 2024 மார்ச் மாத இறுதி வரையேனும் அமலில் இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவில் வெங்காய ஏற்றுமதியில் ஈடுபடுவோர், சர்வதேச சந்தையில் தமது நிலையை தொடர்ந்தும் பேணுவதற்கு, உள்நாட்டுத் தேவை சீரடைந்ததும், மீண்டும் ஏற்றுமதிக்கு இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்ற கருத்துகளையும் முன்வைத்துள்ளனர்.

உள்நாட்டில் பெரிய வெங்காய உற்பத்தி நாட்டின் மொத்தத் தேவையின் சுமார் 35 சதவீதத்தை மாத்திரமே பூர்த்தி செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. எஞ்சிய 65 சதவீத தேவையை நிவர்த்தி செய்வதற்கு இறக்குமதியில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதேவேளை, சின்ன வெங்காய உற்பத்தி நாட்டின் தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இருந்த போதிலும் சின்ன வெங்காயச் செய்கை பெருமளவில் வட பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மற்றும் பயிர் செய்யப்படும் காணியின் அளவு ஆகியன வருடாந்தம் வீழ்ச்சியடைந்த வண்ணமுள்ளது.

இந்நிலையில், தற்போது நிலவும் தொடர்ச்சியான கடும் மழையுடனான காலநிலை காரணமாக வெங்காயச் செய்கை மேற்கொள்வது உகந்ததாக அமைந்திருக்கவில்லை.

சரி, உணவுப் பொருட்களில் பெருமளவில் வெங்காயத்தின் பயன்பாட்டை இன்றியமையாத ஒன்றாகப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளவர்கள். மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கமைய, உணவுத் தயாரிப்பு மற்றும் நுகர்வு பழக்கத்திலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய ஒரு காலமாக இது அமைந்துள்ளது. தற்போதைய சடுதியான விலை அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக வெங்காயத்துக்குப் பதிலாக லீக்ஸ் மற்றும் வெங்காய இலை போன்றவற்றை உபயோகிக்கலாம். வெங்காயத்துக்கு நிகரான சுவையை வழங்காத போதிலும், வெங்காயத்தின் விலை அதிகரிப்பினால் ஏற்படும் கலக்கத்தை ஓரளவு இவை தணிக்க உதவும்.

வணிகத்தின் அடிப்படைக் கொள்கையான குறைந்தளவு விநியோகத்தில், அதிகளவு கேள்வி காணப்படும் சந்தர்ப்பத்தில் விலையும் உயர்வடையும் என்பதற்கமைய, தற்போதைய வெங்காய விலை அதிகரிப்பிலும் அதனை உணர முடிகின்றது. எமது பழக்கத்தில் சற்று மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக இந்த விலையை மீண்டும் ஓரளவு கட்டுப்பாட்டினுள் கொண்டு வரலாம். ஏனைய பொருட்களைப் போல வெங்காயம் என்பது மாதக் கணக்கில் பழுதடையாமல் வைத்திருக்க முடியாதல்லவா. பதுக்கி வைக்கப்பட்டுள்ளவையும் ஒரு கட்டத்தில் சந்தைக்கு வரத்தான் வேண்டும்.






# ஜப்பானில் பணியாற்றுவதற்கான புதிய வாய்ப்பு

ஜப்பானில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், விமான நிலைய கள கையாளல் திறன் காண் பரீட்சையை 2024 மார்ச் மாதம் இலங்கையின் திறன் படைத்த ஊழியர்களுக்காக முன்னெடுக்கவுள்ளதாக ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட தாதியியல் பராமரிப்பு, உணவு சேவை மற்றும் விவசாயம் போன்ற பிரிவுகளில் கடந்த ஆண்டு முதல் திறன் காண் பரீட்சைகள் முன்னெடுக்கப்படுவதுடன், நிர்மாணத்துறையில் திறன் காண் பரீட்சைத் தெரிவு அண்மையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த புதிய அறிமுகத்துடன், இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு ஜப்பானில் ஐந்து பிரிவுகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஜப்பான் ஏற்படுத்தியுள்ளது.

இந்த புதிய வாய்ப்பை பயன்படுத்தி ஜப்பானில் தொழில் புரிவதற்காக இலங்கையின் திறமையான பலர் முன்வருவார்கள் என ஜப்பானிய தூதரகம் எதிர்பார்க்கின்றது. அதனூடாக ஜப்பானிய விமான போக்குவரத்து சேவைகள் துறையில் பங்களிப்பு வழங்குவது மாத்திரமன்றி, இலங்கையின் எதிர்கால விருத்திக்கும் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும். இலங்கையின் விருத்திக்கு அவசியமான ஆதரவையும் ஒழுங்கிணைப்பையும் ஜப்பானிய தூதரகம் தொடர்ந்து வழங்கும் என்பதுடன், இலங்கையுடன் நீண்ட காலமாகப் பேணும் நட்பை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பதிவு தொடர்பான தகவல், 2024 ஜனவரி மாதம் இந்தப் பரீட்சையை முன்னெடுக்கும் ஜப்பான் வான்வழிப்போக்குவரத்து பொறியியலாளர் சங்கத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்படும்.

எழுத்து மூல மற்றும் பிரயோக பரீட்சைகளுக்கான சில மாதிரி வினாக்கள் மற்றும் பாடப் புத்தகத்தை இங்கு காணலாம்.

https://exam.jaea.or.jp/?page_id=356#section1

# SVAT ரத்தாவதன் மத்தியில் பணமில்லா மாற்று முறையின் அவசியத்தை SLAEA தலைவர் வலியுறுத்து



இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் (SLAEA) தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்திக்க லியனஹேவகே, எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை (SVAT) இரத்துச் செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவினால் சவால்கள் நிறைந்த சூழல் எழுந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆடைத் தொழிலில் நிதி பரிவர்த்தனைகளை நிர்வகிப்பதற்கான பாதுகாப்பான மற்றும் நவீன முறையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி, பணமில்லா மாற்று முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். SLAEA இன் 41ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் லியனஹேவகே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். மேலும் 2024ஆம் ஆண்டுக்கான முழு செயற்குழுவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பணத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "புதிய பணமில்லா முறையை அமல்படுத்துவதற்கு அரசுடன் ஒத்துழைக்க ஆடைத் துறை தயாராக உள்ளது. SVATஐ அகற்றுவதை 2025 வரை ஒத்திவைக்கும் முடிவைப் பாராட்டும் அதே வேளையில், வலுவான மற்றும் வெளிப்படையான பணமில்லா வரி திரும்பப்பெறுதல் அமைப்பு அவசியம். மேலும், தொழில்துறையின் நிலையான வளர்ச்சி மற்றும் நெறிமுறை வணிகக் கொள்கைகளுக்கு ஊழலற்ற நிதிச் சூழல் மிகவும் முக்கியமானது" என தெரிவித்தார்.

இதேவேளை, தொழிற்துறையின் தற்போதைய நிலை குறித்து விளக்கமளித்த தலைவர், இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் 85% க்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்ட அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட இலங்கையின் பிரதான சந்தைகளில் கோரல்கள் (Orders) வீழ்ச்சியடைந்துள்ளமையால் ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் மூலோபாய கூட்டாண்மைகளை நிறுவியது.

"இலங்கையில் இருந்து பெறப்படும் 35 மில்லியன் டொலர்களை கருத்தில் கொண்டு, வருடாந்தம் 26 பில்லியன் டொலர் பெறுமதியான ஆடைகளை இறக்குமதி செய்யும் ஜப்பானுக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பு உள்ளது. ஜப்பானிய சந்தையில் எங்களது இருப்பை விரிவுபடுத்த ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பு உள்ளது.

இந்தியாவுக்கான ஆடைகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக, லியனஹேவகே, இந்தியாவிற்கான இலங்கையின் ஆடை ஒதுக்கீடு தற்போதுள்ள ISFTA இன் கீழ் வருடத்திற்கு 8 மில்லியன் துண்டுகளாக வரையறுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார். இந்தியாவில் இருந்து ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான மூலப்பொருட்களை இலங்கை இறக்குமதி செய்தாலும், 50 மில்லியன் டொலர் பெறுமதியான ஐவுளி மற்றும் ஆடைகள் மட்டுமே இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டால் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பு அதிகரிக்கும் என தொழில் துறையினர் நம்புகின்றனர்.

41ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜப்பான் தூதரகத்தின் பிரதித் தலைவர் Katsuki Kotaro, கட்டளைகள் (Orders) வீழ்ச்சியடைந்த போதிலும், பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் இலங்கையின் ஆடைத் துறையின் மீள் நிலைத்தன்மையைப் பாராட்டினார்.

ஆடை சந்தையை விரிவுபடுத்துவது குறித்து இலங்கை மேலும் ஆராய வேண்டும். GSP+ நிவாரணம் நிரந்தரமானது அல்ல என்பதை நான் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். அத்துடன், நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் சந்தை வாய்ப்புக்களை வலுப்படுத்துவது இலங்கைக்கு முக்கியமானதாகும். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களே அதற்கு சிறந்த வழி என்று நான் நம்புகிறேன்" என அவர் வலியுறுத்தினார். ஜப்பானிய சந்தைக்குள் நுழைவதற்கான நல்ல வாய்ப்பை வழங்கும் RCEP உடன் இணைவதற்கான இலங்கையின் விருப்பத்தை அவர் வரவேற்றார்.

இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கம் நாட்டின் ஆடை ஏற்றுமதியில் 70% க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட ஆடை ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மையான சங்கமாகும்.

SLAEA பல்வேறு சட்டப்பூர்வ மற்றும் சட்டப்பூர்வமற்ற சபைகளின் மற்றும் சங்கங்களின் செயலில் உறுப்பினராக உள்ளதுடன் ஆடைத் தொழிலின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் அரசாங்க கொள்கை முடிவுகளைச் செல்வாக்கு செலுத்துவதிலும் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்மஸ்: சில சுவாரஸ்ய தகவல்கள்!





## கிறிஸ்துமஸ் மரம்

கிறிஸ்துமஸ் மரம் சொர்க்க வாழ்க்கையின் அடையாளமாக கருதப்படுகிறது. கிறிஸ்மஸ் மரத்தை வைக்கும் பாரம்பரியம் முதலில் ஜேர்மனியில் தொடங்கியது என்று நம்பப்படுகிறது, அதன் பிறகு அது 1830களில் இங்கிலாந்துக்கு வந்தது. குளிர்காலத்தில் இயேசு கிறிஸ்து பிறந்த பிறகு, சில மரங்கள் பனியை அசைத்து பச்சை நிறமாக மாறியது என்று புராணக்கதை கூறுகிறது. எனவே, கிறிஸ்மஸ் மரம் நிரந்தரத்தையும் அழியாமையையும் குறிக்கிறது.

அத்துடன், 1882இல் முதன் முறையாக கிறிஸ்மஸ் மின்விளக்கு மரம் பயன்படுத்தப்பட்டது. நியூயோர்க்கில் மின்சாரம் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனின் நண்பர் ஒருவர் 80 பல்புகளை வைத்து மரத்தை அழகுபடுத்தினார். பின்பு 1903இல் வியாபார ரீதியாக கிறிஸ்மஸ் மின்விளக்கு மரங்கள் விற்பனைக்கு வந்தன. இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் பிரிட்டனில், தேவதை வடிவிலான மின்விளக்குகள் கிறிஸ்மஸின்போது அதிகமாக விற்கப்பட்டன.

## கிறிஸ்துமஸ் தீவு

இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு தீவிற்கு கிறிஸ்மஸ் தீவு என்று பெயர். வில்லியம் மைனர் என்ற பிரிட்டிஷ் மாலுமி 1643ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் என்று இத்தீவை கண்டுபிடித்தமையால் இப்பெயர்.



* இலை இல்லாத மரம்: ஸ்வீடனில் மக்கள் கிறிஸ்மஸ் மரங்களை நடும்போது பச்சை இலைகளைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அந்நாட்டில் யாராவது இறந்து போனால் பச்சை மரங்களை சமாதி அருகில் நடுவது உண்டு. இறப்பின் சின்னமாக பச்சை மரம் இருப்பதால் கிறிஸ்மஸ் மரங்களுக்கு முழுக்க முழுக்க பூக்களையே பயன்படுத்தி அலங்கரிக்கிறார்கள்.

* கிறிஸ்மஸ் குடில்: இயேசுநாதர் பிறந்ததைப்போல சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடில்கள் விதவிதமான அலங்காரங்களுடன் உலகெங்கும் அமைக்கப்படுகின்றன. இதை முதன்முதலாக புனித பிரான்சிஸ் என்பவர் 1722ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்

## முதல் வாழ்த்து அட்டை

இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்றி என்ற தொழிலதிபர் இந்த அட்டையை உருவாக்கிய பெருமை பெறுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த இவர், கிறிஸ்மஸ் சமயத்தில் உறவினர்களுக்கு கடிதம் எழுத இயலாததால் அட்டையில் படத்தை அச்சிட்டு வாழ்த்தாக அனுப்பினர். ஆயிரம் பேருக்கு அவர் வாழ்த்து அட்டை அனுப்பினார். அதன்பிறகு கிறிஸ்மஸ் சமயத்தில் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. ஹென்றி அனுப்பிய ஆயிரம் வாழ்த்து அட்டைகளை இப்போதும் ஒருவர் லண்டனில் தன் வசம் வைத்துள்ளார்.

## கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் தாத்தாவிடம் (Santa Claus) இருந்து பரிசுகளை பெற பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஊக்குவிக்கிறார்கள். நல்ல குழந்தைகளாக இருந்தால் தான், கிறிஸ்மஸ் தாத்தாவிடம் இருந்து பரிசுகளைப் பெறுவார்கள் என்றும் கூறுவார்கள். உண்மையில் கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் யார்? இவரை பற்றிய வரலாறு என்ன?

புராணக்கதைகளின்படி, கிறிஸ்மஸ் தாத்தா ஆண்டு முழுவதும் குழந்தைகளுக்கான பொம்மைகளை உருவாக்கும் ஒரு ஜாலியான நபராக கருதப்படுகிறார். முதலில் இவர் குழந்தைகளிடமிருந்து அவர்களுக்கு பிடித்த பரிசுகளைக் கோரி கடிதங்களைப் பெறுவார் என்று கூறப்படுகிறது. இவர் வட துருவத்தில் வசிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

வெள்ளை தாடி, மகிழ்ச்சியான மனிதரின் கதை துருக்கியில் கி.பி 280இல் ஆரம்பிக்கின்றது. செயிண்ட் நிக்கோலஸ் என்ற துறவி ஏழைகளுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உதவுவதற்காக பல நன்மைகளை செய்வார் என்று தெரிகிறது.

இந்த துறவி தனது முழு செல்வத்தையும் ஏழைகளுக்கு உதவ பயன்படுத்தி உள்ளார். பின்னாளில் இந்த துறவி குழந்தைகள் மற்றும் மாலுமிகளின் பாதுகாவலராக மாறினார் என்று சில புராணங்கள் கூறுகிறது.

எது எப்படியோ, கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் இல்லாதவர்களுக்கு உதவ கூடிய ஒரு நல்ல மனம்கொண்ட மனிதராக உள்ளார் என்பதை நாமும் கிறிஸ்துமஸ் அன்று ஏழை எளியவர்களுக்கு உதவி இந்த 2023 கிறிஸ்துமஸை இனிமையாக கொண்டாடலாம்.

# கிறிஸ்மஸ்: இறை வருகையின் பேரானந்தம்

உலகம் முழுவதும் இன்று திங்கட்கிழமை (25) கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் களைக்கட்டியுள்ளது. கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு டிசம்பர் 24 முதலே அனைத்துத் தேவாலயங்களில் பிராந்தனைகளும், வழிபாடுகளும் ஆரம்பமாகியுள்ளன.

இயேசு கிறிஸ்வின் பிறந்த தினத்தை கிறிஸ்மஸ் என்று கூறப்படுகின்றது. ஆனால், இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்மஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது.

## கிறிஸ்மஸ்

கிறிஸ்மஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால், கிமு 7க்கும் கிமு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4ஆவது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன. ஆனால், வேறு சில பிரிவுகளை சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து,



ஜனவரி 6ஆம் திகதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.

எப்படி இருப்பினும் கிறிஸ்மஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

இந்தத் தினத்தை கிறிஸ்வர்கள் விசேஷமாக கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் ஆரம்பிப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கிபி 800ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன்பிறகு கிபி 855ஆம் ஆண்டு இட்முண்ட் என்ற தியாகி மன்னராக மூடி சூட்டப்பட்டான். கடந்த 1066ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் 1 மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் 2 கிறிஸ்மஸ் பண்டிக்கையை மிக விமர்சியாக கொண்டாடினார்.

கடந்த 1643ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்துமஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது. இப்படி கிறிஸ்மஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர் உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது.

## பரிசுப் பொருட்கள் பரிமாற்றம்: கிறிஸ்மஸ் கரோல்

கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள பரிசுப் பொருட்களை பரிமாறி கொள்வதும், போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ஆம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் ஆரம்பமானது. கடந்த 1836ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதன்முதலாக கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் ஆரம்பமானது. கிறிஸ்மஸ் பண்டிகையின்போது, கிறிஸ்வர்கள் குழுக்களாக சேர்ந்து கரோல் என்ற இசை நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

இந்த கரேல் நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும், அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கடந்த 1847ஆம் ஆண்டு பிரான்சில் தான் முதல் முதலாக கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கரோலில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்மஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வரலாற்றில் சில சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெற்று உள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும், பாபிலோனியர்களும் கிறிஸ்மஸ் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாக கொண்டாடி வந்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும். மேலும் சிலர் தங்கள் அடிமைகளை பரிசாக பரிமாறி கொண்டனர்.

சில எஜமான்கள் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மட்டும், அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளது. பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் உள்ளிட்டவைகளுக்கு அதிகமாக பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்கு தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்கு பிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர்.

மொத்தத்தில் நல்லது ஓங்கவும், அல்லது அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இயேசு பெருமானை இறைஞ்சி, துதி பாடி மகிழ்கின்றனர் என்பது சந்தோஷமான விடயமாகும்.

பாகிஸ்தான்

# 2024 பொது தேர்தலில் போட்டியிடும் இம்ரான் கான்




பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி பொது தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வேட்பு மனு தாக்கல் செய்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி தலைவரும், முன்னாள் பிரதமருமான இம்ரான் கான் தனது சொந்த ஊரான மியான்வாலி தொகுதியில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக ஊழல் வழக்கு மற்றும் அரசு இரகசியங்களை கசிய விட்டமை உட்பட இம்ரான் கான் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இவர் மீதான ஊழல் வழக்கு உறுதியானதையடுத்து இம்ரான் கான் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். அரசு இரகசியங்களை கசியவிட்ட வழக்கில் பிணை வழங்கக் கோரி இம்ரான் கான் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது. அதன்படி, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இம்ரான், தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனா

## 34,000 கணக்குகள் முடக்கம்

சீனாவில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சமூக ஒழுங்கை நிலை நாட்டும் முயற்சியில் அந்நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர். அதனடிப்படையில், இதுவரை வதந்திகளைப் பரப்பிய குற்றத்தின் கீழ் 34,000 இணையக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

மேலும் 6,300க்கும் மேற்பட்ட நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுவரை 4,800 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சீன பொது பாதுகாப்பு அமைச்சக அதிகாரி லி டாங்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும், "இணையத்தில் தவறான தகவல்களைப் பரப்பி சமூக ஒழுங்கை, அமைதியைக் கெடுக்க முயற்சிக்கும் இணைய கணக்குகளை முடக்கியுள்ளோம். இந்த நடவடிக்கைகள் நல்ல பலனை அளிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இணையவழியுனுடாக நடக்கும் வன்முறைகள், குற்றங்கள், இழிவுபடுத்துதல், தனிப்பட்ட விபரங்களைத் திருடுதல் போன்றவற்றுக்கு எதிராக சீன பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கமைய இதுவரை 110 வழக்குகளை பொலிஸார் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வியட்நாம்

## அதிகரிக்கும் குரங்கம்மை: 6 பேர் உயிரிழப்பு

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் குரங்கம்மை நோய் வேகமாக பரவுகிறது. இந்நிலையில், நாட்டின் தெற்கு மாகாணமான "லாங் ஆன்னில்" நோய் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், 117 பேர் குரங்கம்மை பாதிப்புக்குள்ளாகியுள்ளதோடு 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, நவம்பர் மாதம் முதல் தொற்றுநோய்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஹோ சி மின் நகரத்தின் வெப்பமண்டல நோய்களுக்கான வைத்தியசாலையின் வைத்தியர் ஹுய்ன் தி துய் ஹோ தெரிவிக்கையில்,

"கடந்த மூன்று மாதங்களில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 49 பாதிப்புகளில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 40 பேர் குணமடைந்ததுடன், மூன்று பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் " என தெரிவித்துள்ளார்.





நாளை ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

## அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா பாகிஸ்தான்

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது மெல்பேணில் செவ்வாய்க்கிழமை (26) அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியடைந்த பாகிஸ்தான், தொடரைத் தக்க வைப்பதற்காவது இப்போட்டியில் கட்டாயம் தோல்வியைத் தவிர்க்க வேண்டியுள்ளது.

அந்தவகையில் பந்துவீச்சிலிருந்து ஆரம்பித்து துடுப்பாட்டம் வரையில் பாரியளவில் முன்னேற்றத்தை பாகிஸ்தான் காண்பிக்க வேண்டியுள்ளது. ஷகீன் ஷா அஃப்ரிடியிடமிருந்து இனிங்ஸின் ஆரம்பத்தில் விக்கெட்டுகள் எதிர்பார்க்கப்படுவதுடன், ஆமிர் ஜமால் மற்றும் இப்போட்டியில் விளையாடுவாரென எதிர்பார்க்கப்படும் ஆமிர் ஜமால் மற்றும் சஜிட் கான் ஆகியோர் ஓட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

மறுபக்கமாக பாபர் அஸாம், அணித்தலைவர் பாபர் அஸாம், செளட் ஷகீல் ஆகியோரிடமிருந்து ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதேவேளை அவுஸ்திரேலிய அணியில் மாற்றங்களெதுவும் எதிர்பார்க்கப்படாதபோதும் அண்மைய காலங்களில் ஓட்டங்களைப் பெறத் தடுமாறும் மர்னுஸ் லபுஷைன், ஸ்டீவன் ஸ்மித்திடமிருந்து ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

2026ஆம் ஆண்டு வரையில் நாப்போலியுடன்

## ஒப்பந்த நீடிப்பைக் கைச்சாத்திட்ட ஒஸிம்ஹென்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான நாப்போலியுடனான தனது ஒப்பந்தத்தை எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் நீடிக்கும் ஒப்பந்த நீடிப்பொன்றை அக்கழகத்தின் முன்களவீரரான விக்டர் ஒஸிம்ஹென் சனிக்கிழமை (23) கைச்சாத்திட்டுள்ளார்.

நாப்போலியுடனான 24 வயதான ஒஸிம்ஹென்னின் ஒப்பந்தமானது எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முடிவடைவதாக முன்னர் இருந்திருந்தது.





இத்தாலிய சீரி ஏ தொடர்:

## நாப்போலியை வென்ற றோமா

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான நாப்போலியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் றோமா வென்றது.

றோமா சார்பாக லொரென்ஸோ பெல்லெகிரினி, றொமெலு லுக்காக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, பொலொக்னாவின் மைதானத்தில் சனிக்கிழமை (23) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா தோற்றது.

ஆந்திரா

## "ஜனவரியில் எல்–1 புள்ளியில் நுழையும்"

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து ஆதித்யா எல்-1 விண்கலம் கடந்த செப்டெம்பர் 2ஆம் திகதி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. இந்த விண்கலம், பூமியிலிருந்து சுமார் 15 இலட்சம் கி.மீ தூரத்தை 125 நாட்களில் பயணித்த பிறகு, சூரியனுக்கு மிக அருகில் உள்ள லாக்ராஞ்சியன் புள்ளி எல்-1 யைச் சுற்றி ஒரு ஹாலோ சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

ஏற்கனவே ஆதித்யா-எல்-1 சூரியனின் முழு-வட்டுப் படங்களை எடுத்து இந்த விண்கலம் பூமிக்கு அனுப்பி உள்ளது. தொடர்ந்து அறிவியல் சோதனைகளுக்காக சூரியன் தொடர்பான படங்களை எடுத்து இந்த விண்கலம் அனுப்ப இருக்கிறது. இந்நிலையில், தற்போது ஆதித்யா எல்-1 விண்கலத்தின் பயணம் இறுதிக் கட்டத்தை எட்டி உள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத்;

"சூரியனை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் முதல் விண்வெளி பயணமான ஆதித்யா எல்-1 விண்கலம் அதன் இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகிறது. எல்-1 புள்ளியில் விண்கலம் நுழைவதற்கான கடைசி ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. வருகிற ஜனவரி 6ஆம் திகதி (சனிக்கிழமை) அன்று ஆதித்யா எல்-1 புள்ளியில் நுழையும். குறிப்பாக, ஜனவரி 7ஆம் திகதிக்குள் இறுதி கட்டப்பணிகள் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெற்றிகரமாக எல்-1 புள்ளியில் ஆதித்யா-எல்-1 விண்கலம் நிலைநிறுத்தப்பட்டால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அங்கு இருக்கும். இது இந்தியாவிற்கு மட்டுமல்ல, முழு உலகிற்கும் தேவையான மிகவும் முக்கியமான அனைத்து தரவுகளையும் சேகரிக்கும். சூரியனின் இயக்கவியல் மற்றும் அது நம் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது? என்பதைப் புரிந்துகொள்ள தரவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பிரதமர் நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின்படி 'பாரதிய விண்வெளி நிலையம்' என்ற இந்திய விண்வெளி நிலையத்தை உருவாக்க இஸ்ரோ திட்டம் வகுத்துள்ளது" என தெவித்துள்ளார்.



மும்பை

## பாம்புகளை கடத்தி வந்தவர் கைது




பேங்கொக்கில் இருந்து மும்பையின் சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்திற்கு பாம்புகள் கடத்தி வரப்படுவதாக புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சோதனை நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, சோதனைக்குட்படுத்தப்பட்ட நபரொருவரின் பையில் அரிய வகையிலான ஒன்பது மலைப் பாம்புகளும் இரண்டு வேறு வகையான பாம்புகளும் இருந்துள்ளது.

குறித்த பாம்புகளை பிஸ்கெட் மற்றும் கேக் பைக்குள் மறைத்து வைத்து கடத்தி வந்ததுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்

## வணிகக் கப்பல் மீது ட்ரோன் தாக்குதல்



சவூதி அரேபியாவில் உள்ள ஒரு துறைமுகத்தில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு கர்நாடக மாநிலம் மங்களூரு நோக்கி லைபீரியா நாட்டு கொடியுடன் எம்.வி. செம் புளூட்டோ என்ற சரக்கு கப்பல் வந்து கொண்டிருந்தது.

இஸ்ரேல் நாட்டுடன் தொடர்புடைய இந்திய பெருங்கடல் பகுதியில் குஜராத் வெராவத் நகரில் இருந்து சுமார் 200 மைல் தூரத்தில் வந்து கொண்டிருந்த போது அந்தக் கப்பல் மீது திடீரென டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் கப்பலில் தீப்பற்றியுள்ளதுடன், கப்பலின் ஒரு பகுதி சேதம் அடைந்துள்ளது.


அந்த சரக்கு கப்பலில் 21 இந்திய பணியாளர்கள் மற்றும் ஒரு நேபாளி ஆகியோர் இருந்துள்ளனர்.

அரபிக்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது நடந்த இந்த தாக்குதல் இந்தியாவை குறிவைத்து நடத்தப்பட்டதா என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், ஏமனில் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வரும் ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்த டிரோன் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## செவிய்யாவை வென்ற அத்லெட்டிகோ மட்ரிட்



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோஸ் லொரென்டே பெற்றார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வெஸ்ட் ஹாமிடம் தோற்ற யுனைட்டெட்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் சனிக்கிழமை (23) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

வெஸ்ட் ஹாம் சார்பாக, ஜரோட் பெளவன், மொஹமட் கூடுஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கப்ரியல் பெற்றதோடு, லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை மொஹமட் சாலா பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 25, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.